

வாழ்க்கை ஓவியம்
திருமணப் பரிசு
நூல் ஆசிரியர்:
வித்துவான்
சுந்தர—சண்முகனார்
103

103

இரண்டாவது வெளியீடு !

இரண்டாம் பதிப்பு !!

# வாழ்க்கை ஓவியம்

அல்லது

# திருமணப் பரிசு

ஆசிரியர் :

வித்துவான். சுந்தர—சண்முகனார்.

பதிப்புரிமை]

[விலை அணா 6.

பைந்தமிழ்ப் பதிப்பகம்,
61, பி, வைசியர் தெரு,
புதுச்சேரி.

# பதிப்புரையும் முன்னுரையும்

"வாழ்க்கை ஓவியம்" என்னும் இத் திருமணப் பரிசு நூலை, எங்கள் இருபதாம் வெளியீடாக — இரண்டாம் பதிப்பாக வெளியிடுகின்றோம். இந்நூல், திருமணத்தில் பரிசளிக்க உதவும் என்பதும், குடும்ப வாழ்க்கையைச் சித்தரிப்பது என்பதும் நூலின் பெயராலேயே விளங்குமே!

இங்ஙனம்,

சிங்கார—குமரேசன்.
சுந்தர—சண்முகனார்.

பைந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி. 15—9—50

# "வாழ்க்கை ஓவியம்"

அல்லது

## "திருமணப் பரிசு"

### தோற்றுவாய்

"வாழ்க்கை ஓவியம்" என்னும் இத் "திருமணப் பரிசு" நூலை, இங்கிலாந்து வரலாறொன்றிலிருந்து தொடங்குவோம். எத்தகைய அன்பை-ஏன்-காதலைத் திரையாகக் கொண்டு, அதில் மனைவியும், கணவனும் தம் வாழ்க்கை என்னும் ஓவியத்தைத் தீட்டினால், அவர்களின் வாழ்க்கை ஓவியம், இரவிவர்மாவின் திரை ஓவியம் போல, உலகோரின் உள்ளக் கண்களைக் குளிரச்செய்யும் என்பதை, அவ்விங்கிலாந்து வரலாறு விளக்காமற் போகாது.

முன்பொரு காலத்தில், இங்கிலாந்து நாட்டில் 'லீயர்' என்னும் மன்னன் (King Lear) ஒருவன் செங்கோல் செலுத்தி வந்தான். அவனுக்கு கானரில் (Goneril), ரீகான் (Regan), கொர்டெலியா (Cordelia) என்னும் மூன்றே பிள்ளைகள் இருந்தனர். பிள்ளைகளென்றால், மூவரும் குமாரர்கள் அல்லர்; குமாரிகளே! மூத்தவள் கானரில், ஆல்பனி நாட்டு மன்னனை (Duke of Albany) மணந்துகொண்டிருந்தாள். நடுப்பெண் ரீகான், கார்ன்வால் நாட்டு மன்னனுக்கு (Duke of Cornwall) வாழ்க்கைப்பட்டிருந்தாள். மூன்றாம் பெண் கொர்டெலியா கடிமணமாகாத கன்னியாயிருந்தாள்.

வேந்தனுக்கோ பெண்களின்மேல் வெகு பிரியம். வயதோ முதிர்ந்தது. உடல் தளர்ந்தது. அண்ணன் தம்பிகளை, ஓரடி மண்ணிற்காக ஒன்பதினுயிரம் வெண்பொற்காசு செலவிட்டு வழக்காடும்படிச் செய்கின்ற மண்ணாசை—தம் ஆட்சியின்கீழ் எவ்வளவு பெரிய நிலப்பரப்பு (சாம்ராஜ்யம்) அடங்கியிருப்பினும், மேலும் பிறர் நாட்டைப் பிடிக்கத் தூண்டுகின்ற பேராசை பெற்றெடுத்த குழந்தையாகிய மண்ணாசை, லீயர் மன்னனிடத்து விடைபெறத் தொடங்கியது. காரணம்...? ஆண்டுகள் பலவாக ஆண்டு ஆண்டு அலுத்துப்போயிற்று அவன் ஆவல். முதுமையும், அதன் குழந்தையான ஓய்வு மனப்பான்மையும் அவனை இறுகத் தழுவிக்கொண்டன. எனவே, அவன் ஆட்சியைத் தம் அரும்பெரும் மக்களிடத்தில் ஒப்புவிக்கத் தொடங்கியதில் வியப்பொன்றும் இல்லையல்லவா? பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது உண்மையாயினும், ஆண்டு அநுபவித்து அடங்கிய அறிவுடையோர்க்கே இந்நிலை கைவரப்பெறுமன்றோ?

வேந்தன் மூத்த மகளை அழைத்தான். "என் செல்வமே! எனக்கோ வயது முதிர்ந்து விட்டது. கருத்தை ஆட்சியில் செலுத்த முடியவில்லை. ஓய்வு தேவைப்படுகின்றது. உனது கருத்தென்ன? என்னைப்பற்றி நீ என்ன எண்ணிக்கொண்டிருக்கிறாய்? என்மேல் எவ்வளவு அன்பு வைத்துள்ளாய்?" என்று வினவினன். கேட்ட கானரில், "மதிப்பிற்குரிய தந்தாய்! என் உடல், உயிர், குடும்பம், இவ்வுலகம் என்னும் எல்லாவற்றைக் காட்டிலும் உங்கள் மேலேயே எனக்கு விருப்பம் மிகுதி. நீங்களின்றி நானில்லை. உடலின்றி உயிரோ, உயிரின்றி உடலோ உலகில் விளங்கமுடியுமா?" என்றாள். கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்ட

மன்னன், மூன்றில் ஒரு பங்கை அவளுக்கு அளிப்பதாக வாக்களித்து, பின் இரண்டாம் மகளையும் நோக்கி, முன்போலவே வினவினன். அவளோ, மூத்தோள் மொழிந்ததனினும் மும்மடங்கு கூட்டி மொழிந்தாள். அவளுக்கும் மூன்றில் ஒரு பங்கு வழங்குவதாக வாக்களித்த வேந்தன், கடைசியாகக் கடைசி மகளையும் அழைத்து முன்னையோரை உசாவியது போலவே உசாவினன்.

தந்தையின் கேள்விக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்ட கொர்டெலியா, எந்தையே! உலகில் ஓர் உண்மையான மகள், தன் தந்தைக்கு உண்மையாக எவ்வளவு அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றளோ, அவ்வளவு அன்பையும் யான் தங்கட்குச் செலுத்தும் உரிமையுடையவள். இவ்வுறுதியினின்றும் என்றும், எங்கும் தவறவே தவறேன். ஆனல், எனக்குத் திருமணமாகிவிடின், உங்களைவிட என் கணவரிடத்தேதான் என் அன்பு சற்றாயினும் முனைப்பாக இருக்கும் அதனல் உங்களிடம் அன்பில்லை என்று எண்ண வேண்டாம்; மன்னிக்க வேண்டுகிறேன்" என்று பதிலிறுத்தாள். உடனே, உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினத்தைக் காத்துக் கொள்ள முடியாத வேந்தன் சிறிய மகளை வெறுத்தான்; விலக்கி வெளியேற்றியும் விட்டான். சொத்துக்கு ஆசைப்படாமல், அவளது அன்பிற்கு அடிமைப்பட்ட 'பிரான்சு மன்னன்' (The King of France) அவளை மணந்து ஆதரித்தான். வேந்தன் லீயரோ, அரசை இரண்டாகப் பிரித்து முதலிரண்டு பெண்கட்கும் ஈந்தான். தன்னிடத்திலிருந்து ஆட்சியைப் பறிப்பதற்காகவே அவ்விரண்டு பெண்களும் அதிக அன்பு காட்டுவது போல் நடித்தார்கள் என்பதை அவன் அறிந்திருந்தால் அப்படிச் செய்வானு? தந்தையைத் தாங்கள்

ஆதரிப்பதாக ஒத்துக்கொண்டு ஆட்சியைப் பெற்றுக்கொண்ட அவ்விரு பெண்களும், நாளா வட்டத்தில் தந்தையைக் கவனித்துக் காப்பாற்றாமல் வெளியேற்றி விட்டனர். அஃதறிந்த மூன்றாம் பெண், தமக்கையரின் கல்நெஞ்சிற்கு வருந்தி, தந்தையைத் தான் அழைத்துக்கொண்டு வந்து அகங்கனிந்த அன்போடு ஆதரித்து வந்தாள். கணவனிடம் அதிக அன்பு செலுத்தவேண்டும் என்னும் கடமையை உணர்ந்த—கள்ளங் கபடற்ற அக்காரிகை, தன் தந்தையைக் காக்கவும் தவற மாட்டாளல்லவா. கடமை பெரிதன்றோ ?

மேற்கூறியவாறு முதிர்ந்த அன்புச் சங்கிலியால் பிணைக்கப்பெற்ற மணமக்களின் வாழ்க்கையே வளம் பெறும் என்பதற்காக இவ்வரலாறு இங்கு எடுத்துக்காட்டப் பெற்றதேயன்றி, 'பெண் மக்களே! உங்கள் தந்தையர்மேல் விருப்பம் வேண்டாம்; கணவனுக்கே தொண்டு செய்யுங்கள்' என்று விளம்பரம் செய்து, பெண்ணைப் பெற்றவரின் பெருஞ் சினத்திற்கு ஆளாவதற்காக இஃது எழுதப் படவில்லை. பிற்பாடு சிறிய பெண்ணே பெற்றவரைக் காத்ததாக வரலாறு முடிவதால் பிழையொன்றும் நேராதென் றெண்ணுகிறேன்.

## குடும்ப வாழ்க்கை

உலகிலுள்ள குழந்தை வாழ்க்கை, விளையாட்டு வாழ்க்கை, பள்ளிக்கூட வாழ்க்கை, தனி வாழ்க்கை, துறவற வாழ்க்கை முதலிய வாழ்க்கை வகைகள் எல்லாம் சிற்றரசர்கள் என்றால், அவற்றிற்குத் தலைவனாய் முடிசூடித் திகழும் பேரரசன் குடும்ப வாழ்க்கையே! ஏனைய வாழ்க்கைகள் எல்லாம் விண்மீன்கள் (நட்சத்திரங்கள்) என்றால், அவற்றிற்கு நடுநாயகமாய்த் தலைமை தாங்கும்

திங்கள் (சந்திரன்) குடும்ப வாழ்க்கையே என்றால் வரும் தவறொன்றுமில்லை. என்? குடும்ப வாழ்க்கை இல்லாவிடின், உலகில் பிறப்பேது? குழந்தையேது? மக்கள் ஏது? துறவிகள் ஏது? உணவுகள் ஏது? உலகந்தான் ஏது? குடும்பமே உலகம்! உலகமே குடும்பம்! விளக்கிச் சொல்ல வேண்டுமானால், பல உறுப்புக்களின் தொகுதியே உடம்பாக நிற்றல்போல, பல குடும்பங்களின் கூட்டுறவே உலகம் என்னும் கருத்தை மேளதாளத்தோடு வரவேற்கலாம். ஆனால், 'முதல் மனிதனின் தோற்றத்திற்கு முன் உலகம் இல்லையா? உலகம் இன்றி மனிதன் எப்படித் தோன்றினான்' என்று வினவலாம். ஒருவரும் இல்லாத நிலையில், உலகத்தைப் பற்றிக் கவலைப்பட எம்மனிதன் விரும்புவான்? எனவே, குடும்ப வாழ்க்கையின் உயர்வு புலப்படும்.

## கணவனும் மனைவியும்

குடும்பம் என்னும் நாடக மேடையில், வாழ்க்கை யென்னும் நாடகத்தை நடிக்கும் நாடக ஓவியர் பலர். அவர்களுள், தலைமை நடிகர்களாகிய காதலன்—காதலியாக நடிப்பவர் கணவனும் மனைவியுமே! இவர்கள் ஒருவரோடொருவர் கூடி வாழக் காரணம் என்ன? தனித்து வாழக் கூடாதா? தேவையுள்ளபோது மட்டும் கூடி, பின்பு பிரிந்து வாழலாகாதா? என்றால் முடியாது. ஏன்? முதலில் மனிதன் அப்படித்தான் வாழ்ந்தான். வாழ்ந்தான் என்ன—அப்படி வாழ்வதையே அவன் ஆதிகாலத்தில் அறிந்திருந்தான். ஆனால்; அறிவு முதிர முதிர, நாகரிகம் வளர வளர, ஒருவனுக்கு ஒருத்தியும், ஒருத்திக்கு ஒருவனும் என்று வரையறை செய்து கூடி வாழ்வதுதான், வசதியும் வளமும் பெற்ற உண்மை வாழ்வாகும்

என்பதை யறிந்தான். இன்றைக்கு நாகரிகமாக வாழ்கிறான். இம்முறையைப் பின்பற்றாதவர்கள் இன்றைக்கும் நாகரிகம் அற்றவர்களேயாவர். இவ்விதத்தில், உலகில் தென்னிந்தியர்கள் மிக மிக நாகரிகம் பெற்றவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பெருமையில் நம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டல்லவா?

## வாழ்க்கையின் நோக்கம்

எனவே, மக்கள், பல நல்ல நோக்கங்களையும், நன்மைகளையும் கருத்திற் கொண்டே, குறிப்பிட்ட ஆணும் பெண்ணுமாகக் கூடிக் குடும்பம் நடத்தக் கற்றுக் கொண்டனர் என்பது புலனாகும். அந் நோக்கங்களுள் மிகவும் இன்றியமையாதவைகள் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் காத்தல், உறவினரையும் விருந்தினரையும் போற்றல், உலக வளர்ச்சிக்கான நன்மக்களைப் பெற்று நன் முறையில் வளர்த்தல், குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய செல்வத்தை நல்ல முறையில் திறம்பட ஈட்டி, நல்ல முறையில் செலவிடுதல் முதலியன வாகும்.

## பெண்டிரின் சிறப்புரிமை

கணவன், மனைவி எனும் இருவரும் குடும்பம் என்னும் தேரை யிழுக்கும் இரு குதிரைகளா யினும், குடும்பப் பொறுப்பில் பெரும்பங்கு கொள் பவர்—குடும்பம் என்னும் பெயர் வழங்கப்படு வதற்கே காரணமாயிருப்பவர்—பெண்மணிகளே! இன்னுங் கேட்டால், இயற்கையமைப்பே அவர் களை அப்படி அமைத்திருக்கின்றது. ஆதலின் அவர்கள் ஆடவரினும் அதிகமாக வீட்டோடு தொடர்பு கொள்ள வேண்டியவரா யுள்ளனர். வேண்டுமானால், இப்பொழுது ஆண்கள் செய்யும்

வெளிவேலைகளை யெல்லாம், வெளியில் சென்று பெண்களே செய்ய வேண்டும்; பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளை யெல்லாம், வீட்டிலிருந்து ஆண்களே செய்ய வேண்டும் என்று ஒரு சட்டம் அரசாங்கத்தின் மூலமாகப் பிறப்பித்துப் பார்ப்போம். இச்சட்டம் ஒரு நாளைக்குமேல் நடக்காது. எங்கும் குழப்பம். கண்டனக் கூட்டம்—கண்டனத் தீர்மானங்கள்—வேலை நிறுத்தம்—செய்தித் தாள்களில் (பத்திரிகைகளில்) கண்டனத் தலையங்கம்—என்னும் இவைகளே மறுநாள் தாண்டவமாடத் தொடங்கிவிடும். ஒருவேளை, பிள்ளை பெறும் இயற்கை யமைப்பைப் பெண்களிடத்திலிருந்து ஆண்கட்கு மாற்றி விட்டால் இச்சட்டம் ஒழுங்காக (அமுலில்) நடை பெறலாம். யார் செய்வது அப்படி? எனவே, குழந்தை வளர்ப்பு, பொறை (கர்ப்பம்), பொறையுயிர்ப்பு (பிரசவம்) முதலிய இயற்கைத் தடைகள், பெரும்பாலான குடும்பங்களில் பெண்களைக் கட்டுப்படுத்தி விடுகின்றன. ஆனால், பெண்கள் வெளியே வரக்கூடாது என்னும் பேதைமை கொண்டு இங்கு எழுத வரவில்லை. இயன்றவரை இயன்றதை யாரும் செய்ய உரிமையுண்டு.

ஆராய்ந்து பார்த்தான் மனிதன்; ஐந்தாறு குழந்தைகளைப் பெற்றுக் காப்பதே பெண்ணுக்குச் சரியாயுளது. அந்தோ! மேலும் அவளை வெளிவேலைக்கு விடாமல் நாம் உழைத்து ஊதியம் தேடி வந்து உண்போம் என்று முடிவுகட்டி, பெண்ணை வீட்டில்விட்டு, தான் நாட்டிலும், காட்டிலும் சென்று உழைக்கத் தொடங்கினன். உண்மை இவ்வளவே! ஏன்—பெண்களுக்குள்ள பெயரைப் பார்ப்போமே! வீடாகிய மனையில் இருப்பதால் 'மனைவி' என்னும் பெயரையும் வீடாகிய இல்லில் இருப்பதால் 'இல்லாள்'

என்னும் பெயரையும் கணவன் தன் மனைவிக்குச் சூட்டினானன்றோ?

ஒரு மனிதர் பாதைவழியே வந்துகொண்டிருந்தார். அவர் நண்பர் ஒருவர் அவரை எதிரில் கண்டு, எங்குச் சென்றுவருகிறீர்? என்று வினவினார். அதற்கவர், 'எங்கள் வீட்டிலே ஊருக்குச் சென்றார்கள், அவர்களை வண்டியேற்றிவிட்டு வருகிறேன்' என்று விடை பகர்ந்தார். உண்மையுணராத நண்பர், 'வீட்டிலே என்றால் நும் தாயார் சென்றனரோ' என்றார். அதற்கவர், 'இல்லையையா, எங்கள் வீட்டிலே என்கிறேன், நீர் என்னவோ தாயாரா என்று கேட்கிறீர்' என்றார். உடனே நண்பர், 'ஓகோ, நும் தகப்பனார் சென்றாரா? அப்படிச் சொல்லும்' என்றார். அதற்கவர், 'இல்லையையா இல்லை! எங்கள் வீட்டிலே வீட்டிலே என்று அடித்துக்கொள்கிறேன்; மீண்டும் தகப்பனாரா என்று கேட்கிறீர்; வீட்டில் என்றால் வேறு யாரையையா குறிக்கும்? என் மனைவி சென்றாள் என்று சொன்னேன்' என்றார். அதற்கு நண்பர், 'ஓ! உமக்கு உலகில் உள்ள பொருள்களில் மனைவிதான் வீடாகத் தெரிகின்றாளோ' என்று குறும்பு பேசிச் சிரித்துச் சென்றார்.

உயர்தர ஆற்றல் (500,1000 Candle Power) உடைய மின்சார விளக்குக்கள் (Electric Light) பல, ஒரு வீட்டில் ஒளி வீசிக்கொண்டுள்ளன. அவ்வீட்டிற்குரிய பெருஞ் செல்வரோ, ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்து, எதிரிலுள்ள தம் மனைவியிடம், 'வீட்டில் ஒரு விளக்கு ஏற்றி வைத்துவிட்டால் நம் கவலை தீர்ந்துவிடும்' என்கிறார். இதன் கருத்தென்ன? அவர்களின் மகனுக்கு, ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துத் திருமணஞ்செய்து வைத்

தலையே விளக்காக அவர் கருதுகிறார் என்பது புலனாகவில்லையா? மற்றைய விளக்குக்கள் எல்லாம் போதுமான விளக்குக்கள் ஆகா என்பது புலப்படவில்லையா? இப்போது நீங்களே தீர்ப்புச்சொல்லுங்கள், கணவன் மனைவியருள், குடும்பவிளக்கு—வாழ்க்கை ஓவியம் யார் என்பதை! எனவே, குடும்பத்தில் விளக்கேற்றுவதால் குடும்ப விளக்காகத் திகழ்கின்ற பெண்மணிகள்—வாழ்க்கையை ஓவியப் படுத்துவதால் வாழ்க்கை ஓவியமாக விளங்கும் மகளிர்கள், எவ்வெவ் முறையில், குடும்பத்தை விளக்கவேண்டும், வாழ்க்கையை ஓவியப் படுத்தவேண்டும் என்பதை ஒரு சிறிது நோக்குவோம்.

## 1. கணவனைக் காத்தல்

பெண்மணிகளின் உதவியின்றி வாழும் ஆடவர் போதிய வசதியுடன் வாழ முடியாது. ஒரு நாளைக்கு ஊருக்கு அனுப்பிவிட்டாலும், வசதி குறைந்து விட்டது என்று வருந்துகின்ற ஆடவர்களை நாம் பார்க்காமல் இல்லை. ஏன்—நம் அநுபவத்திலும் நாம் காணாமல் இல்லை. சமையலாள் வைத்துச் சாப்பிடுவதும், சாப்பாட்டுக் கடையில் உண்பதும் உயிர்ப் பற்றவையாகும். குருடன் கூடத்தான் கோல்கொண்டு வழி நடக்கின்றான். அதிலென்ன பயன்? கோல் கண்ணாகுமா? சமையலாளும், சாப்பாட்டுக் கடையினரும் உயிர்க்குயிரான மனைவியாவரா? உண்ணுபவர் நிரம்ப உண்ணவேண்டும் என்ற பேரன்பும், உணவு உடம்புக்கு ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற பேரிரக்கமும் அவர்கட்குண்டோ? பிழைப்பிற்காகவன்றோ அவர் செய்கின்றனர்? கணவரை இனிய பேச்சாலும், இனிய உணவாலும் களிக்கச்

செய்பவர் மனைவியரே! இத்தகைய மனைவியைப் பெற்ற ஆடவனுக்கே வாழ்க்கை சுவையாகும்!

## கணவர்க்குத் தொண்டு

ஒரு செல்வ மகள். விலையுயர்ந்த புடவையைக் கட்டிக்கொண்டே தயிர் கடைந்தாள். அவ்வமயம் அடுப்பின் மேல் வைத்திருந்த உணவு கொதித்து வழியத் தொடங்கிற்று. அஃதறிந்த மங்கை தயிர் கடைவதை நிறுத்தி விரைந்தெழுந்தாள். உடை நெகிழ்ந்தது. விலையுயர்ந்த பட்டுப் புடவை யென்றும் எண்ணாமல், தயிர்க்கையாலேயே புடவையைக் கட்டிக்கொண்டே அடுப்பருகில் ஓடினாள். தாளிதப் புகை கண்ணையும் மூக்கையும் அப்புவதையும் பொருட்படுத்தாது தாளிதம் செய்து சமைத்தாள். ஏன்—சமைத்த பின் தயிர் கடையலாமே? உணவு அடுப்பில் இருக்கும் போதே தயிர் கடைந்தது எதற்காக? தயிர் கடைந்தால்தான் என்ன—கடைந்து முடித்துவிட்டுப் போய்த் தாளிக்கலாமே? என்ற ஐயங்கள் தோன்றலாம். தயிர் கடைவதையும், சமையலையும் ஒரே காலத்தில் செய்தால் சமையல் விரைவில் முடியும். உரிய நேரத்தில் தாளித்தால்தான் உணவு சுவை கெடாமல் பதமாக அமையும். எனவே, விரைவில், சுவை மிக்க உணவைக் கணவனுக்குப் பரிமாற வேண்டும் என்னும் காதலாலேயே அப்பெண்ணினல்லாள் அங்ஙனம் செய்தாள் என்பது தெளிவாகுமன்றோ? அவ்வுணவை உண்டு கொண்டிருந்த கணவன், சுவையைப்பற்றிப் பலபடப் புகழ்ந்தான். அதைக்கேட்ட அப்பெண்ணின் முகத்தாமரை, பிறர் பார்க்கப் போகிறார்கள் என்ற நாணத்தோடு மிக நுட்பமாக மலர்ந்தது. இந்நிகழ்ச்சி, ஏறக்குறைய 2000 ஆண்டுகட்கு முற்

பட்ட 'குறுந்தொகை' என்னும் சங்க நூலுள், 167-ஆம் பாடலில் பொதிந்து கிடக்கின்றது.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனி தெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"

என்பது அப்பாட்டு.

## கண்ணகியின் காதல்

இவ்விடத்தில், கண்ணகியின் காதற் செயல் ஒன்றினை விட்டுவிட மனம் வரவில்லை. அவ்வரலாற்றினை அழகாகச் சிலப்பதிகாரத்தில் செப்பியுள்ளார் இளங்கோவடிகள். கண்ணகி தன் கணவன் கோவலனுடன், மதுரையில் மாதரி வீட்டில் அடைக்கலம் புகுந்தாள். இயற்கை யாரை விடும்! அவள் பிறந்ததோ மிகப் பெருஞ் செல்வக் குடும்பம். வளர்ந்ததோ பல பணிப் பெண்கள் சூழ. வாழ்க்கைப் பட்டதும் இரும் பெருஞ் செல்வக் குடும்பமே! ஆதலின், அவள் கடுமையான வேலைகளைச் செய்தறியாதவள். இவ்வியல்புடைய கண்ணகி, கணவற்கு ஏதோ பசி தீரும் அளவில் எதையோ கொதிக்க வைத்தாளா? எங்கோ ஒரு மூலையில் கணவனை இருக்கச் செய்து அள்ளிப் போட்டாளா? இல்லவே யில்லை. பல வகைக் காய்களை அரிந்தாள்; அதனல், மெல்லிய காந்தள் மலர் போன்ற கை விரல்கள் சிவந்தன. அடுப்பு மூட்டிச் சமையல் தொடங்கினுள்; அதனல், குவளைபோன்ற கண்கள் சிவந்தன; செந்தாமரை முகத்தில் சிந்தின வேர்வைத்துளிகள். அவற்றைப் பொருட்படுத்தவில்லை அவள்

—தாய் வீடு தாழ்ந்த தாயினும், கணவன் வீடு வந்ததும் கழைக்கூத்தாடத் தொடங்கி விடுகின்ற சில சண்டமாருதங்களைப்போல் சண்டித்தனம் செய்ய வில்லை அவள். கணவனைக் களிக்கச் செய்யக் கைப்பாகத்திறன் முழுதையும் காட்டிச் சமைத்தாள். தூய்மையான ஓரிடத்தில் ஒரு தடுக்கையிட்டாள். கணவனை அதில் அமரச் செய்தாள். தன் மலர்க்கைகளால் தண்ணீர் விட்டுக் கணவன் கால்களைத் தூய்மைசெய்து வணங்கினாள். தெய்வத்தைத் தொழ மறந்தாலும், மணவாளனை மறவாது மங்கல நாணிற்கு மதிப்பளிப்பது. தென்னிந்தியத் திலகங்களின் பண்பாடன்றோ? பின், அவன் முன்பு தரையில் தண்ணீர் தெளித்துத்தடவினாள். அவ்விடத்தில் ஒரு தலைவாழை இலையைப் பரப்பினாள். பணிவுடனும், அன்புடனும் பரிமாறத் தொடங்கினாள். கோவலனுடைய நாக்கு அறுசுவை அமுதால் இன்புற்றது. இடையிடையே தேனூறப் பாலூறப் பேசும் கண்ணகியின் தித்திப்புப் பேச்சுக்களால் அவன் செவிகளும் இனிப்புண்டன. அவன் மனமார, வயிறார உண்டு மகிழ்ந்தான்.

## தம் இல்லும் தம் உணவும்

கண்ணகி, வெளியூரில் பிறர் வீட்டிலேயே இங்ஙனம் சிறப்புச் செய்துளாள் என்றால், கணவன் ஊரில்—கணவன் வீட்டில் கணவனுக்கு எவ்வளவு பணிபுரியக் காத்திருந்திருப்பாள் என்பது விளங்கும். கொண்ட மணவாளருக்குப் பணி செய்வது மாதர் கடமை யன்றோ? மற்றும், பிறர் இருக்கையில் பிறர் மனைவி கையால் கொடுக்கப்பட்டு உண்ணும் தெய்வ அமிழ்தத்தினும், தம் இருக்கையில் தம் மனைவி கையால் பரிமாறப்பட்டும், தம் மனைவி மக்களின் வயிறுகளோடு நின்று

விடாமல் பலர்க்கும் பகுத்துக் கொடுத்தும் உண்ணும் தம் கூழே மிகச் சிறந்ததாகும். இதனை, தித்திக்கத் தித்திக்கத் தேனொழுகும் தெய்வத் திருக்குறள் ஒன்றால் தெளியலாம்.

தன் காதலியோடு கலந்து சிற்றின்பம் நுகர்ந்த ஓர் ஆண்மகன், தான் பெற்ற இன்பத்தைப் புகழக்கருதி, அதனினும் சிறந்ததோர் இன்பத்தை அதற்கு உவமையாகக் கூறலானான்: "என் காதலியோடு கலந்து யான்பெற்ற இன்பமானது, தம் வீட்டில் (மனைவியுடன்) இருந்து கொண்டு, தாம் தேடிய சொந்த உணவைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்து உண்ணும் இன்பம் போன்றுள்ளது" என்பதே அவன் புகழ்மொழி. இக்கருத்து, திருக்குறள் காமத்துப் பாலிலுள்ள

"தம்இல் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"

என்னும் குறளில் நயம்பட நவிலப்பட்டுளது.

## பெண்டிரால் பெருமித நடை

தாய் வீட்டில் செல்வமாக வளர்க்கப்பட்டு வந்த பெண், கணவன் வீட்டிற்கு வந்ததும் மிக்க பொறுப்புணர்ச்சி உடையவளாக மாறிவிடுகின்றாள். தாயிடம், கொஞ்சிக் கொஞ்சிக் குலாவி, விருப்பம்போல் விளையாடிக் கொண்டிருந்தவள், இங்கே எழுந்ததிலிருந்து தூங்கும்வரை கணவற்காகவும், குழந்தைகட்காகவும் ஓடியோடி உழைக்கின்றாள். அங்கு உப்பு நுணுக்கவும் முடியாதென்று விளையாடியவள், இங்கு மலையைப் புரட்டுகின்றாள். வீட்டுப் பொருள்களைச் சிதறாமல் காக்கின்றாள். கணவற்கு நோய் வந்து விட்டால் மருத்துவர் போல் நின்று மருத்துவம் பார்க்கின்றாள். தாய்போல் அமைந்து உணவூட்டுகின்

றாள். அமைச்சன்போல் அமர்ந்து அறிவு புகட்டு கின்றாள். பணியாளரைப் போல் பணிந்து பணி புரிகின்றாள். நண்பனைப் போல் நின்று உயிர் காக்கின்றாள். சிற்றின்பமும் சேரச் செய்கின் றாள். இங்ஙனம் பலவகையிலும் உதவி, கணவ னுடைய மானம் கப்பல் ஏறாதபடிக் காக்கின்றாள். கணவனுக்கு இன்னும் என்ன நன்மைகள் இயற்ற வேண்டும்!

இத்தகைய மனைவி வாய்க்கப்பெற்றவரே நற்பேறுடையவர். வாய்க்கப் பெறாதவர்க்கு, 'உம் மனைவியிடம் ஒன்றும் செல்லவில்லையே' என்ற பழிச் சொல் வரும் என்ற அச்சத்தால், அந்தோ! தம்மை இகழ்ந்து பேசும் எதிரிகளின் முன் சிங்கம்போல் நடக்கும் பெருமித நடை தோன்றுவதற்கு வழியில்லை யன்றோ? இதனை,

> "புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
> ஏறு போல் பீடு நடை"

என்னும் திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது. ஏன், உலக வரலாறுகளையும், நிகழ்ச்சிகளையும் உற்று நோக்கினாலே உண்மை புலனாகுமே!

## 2. விருந்தோம்பல்

தெய்வப் புலவர் திருவள்ளுவனார் தெரிவித் துள்ளபடி, 'தன் காத்து, தன்கொண்டான் பேணி, தகை சான்ற சொல் காத்து, சோர்வி லாள்' ஆகிய பெண் தம் வீட்டிற்கு வரும் விருந் தினரையும் போற்ற வேண்டும். தேவாமிர்த மானாலும், விருந்தினரை வெளியே விட்டுத் தாம் மட்டும் உண்பது மனிதத் தன்மைக்கு அழகே யன்று. 'மருந்தேயாயினும் விருந்தோடு உண்' என்பதை மறக்க முடியுமா? மறுக்க முடியுமா? காக்கையும் அன்றோ இனத்தை அழைத் துண்ணு

கின்றது. மேலும், வீடென ஒன்றுகொண்டு, அதில் கணவன் மனைவியென இருவர்கூடி இல் வாழ்க்கை நடாத்துவது, உலகிற்கு உதவி உழைப் பதற்குத் தானே! மக்களிடையே விருந்தோம்பும் வேளாண்மையில்லை யென்றால், உடல் நலம் குன்றி உழைக்க முடியாதவர் என்செய்வர்? மனைவியிழந்தவர், மணவாளனை யிழந்தவர், தாயற்ற பிள்ளைகள் ஆகிய எல்லோரும் உண்பது எப்படி? உலகில் மக்கள், எச்சிற்கையால் காக்கை ஓட்டாமலும், ஈரக்கையை உதறாமலும் இருந்தால், மக்கள் தொகை வரவரக் குறைந்து போகும் என்பதில் தடையில்லை. ஒருவர்க்கொரு வர் உதவி ஒப்புரவு செய்துகொண்டாலே எவரும் எங்கும் வாழமுடியும். வாழ்க்கையின் அடிப்படை இதுவாகவே இருக்கவேண்டும். இயற்றையெல் லாம்,

"விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று",

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

முதலிய திருக்குறள்களால் திருவள்ளுவர் விளக்கி யுள்ளார். மேலுமவர், எவ்வளவு பெருஞ் செல்வரா யிருப்பினும், விருந்தோம்பாதவர் ஏழைகளாகவே கருதப்பட்டு இழிக்கப்படுவார்கள் என்னும் கருத்தில்,

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு"

என்னும் குறளைக் கூற மறந்தாரில்லை. நாமும் அவர் மொழிகளை மறக்கலாமா? இவ் விருந்தோம் பலும் பெண்ணில்லா வீட்டில் நடைபெற வழி யில்லை. இத் தொண்டில் பெரும்பங்கு பெண்பா

லார்க்கே உரியதாம். அது அவர்களின் தனிக் கலையுங்கூட!

## கண்ணகியின் கற்புச் செயல்

கற்புக் கணிகலமாகிய கண்ணகியை, வாழ்க்கையில் இன்பமின்றித் தவிக்கவிட்டான் கணவன் கோவலன். மாதவியை அடுத்திருந்தான். பின் பிழையுணர்ந்து வீடு திரும்பினன். மனைவியை மதுரைக்கு அழைத்துச் சென்றான். மாதவி வீட்டில் தங்கினன். ஆங்கு உணவுண்டபின் கண்ணகியை அருகில் அமரச் செய்தான். தன் குற்றங்களை யெல்லாம் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்பவன்போல் புலம்பத் தொடங்கினன்: "இரவில், கரடு முரடான வழிகளில் கால் நோவ உடன் வந்த கண்ணகியே! உன் அன்பை என்னென்பேன்! உன் உள்ளம் அறியாமல் வாணளை வீணள் ஆக்கினேன். உனக்கு இன்பமே அளித்தேனில்லை. துன்பக் கடலிலேயே தோயச் செய்தேன். அவ்வமயம் உன் மனநிலை எவ்விதம் இருந்ததோ! ஆ கொடியேன், என் செய்தேன்?" என்றெல்லாம் பலகூறி அரற்றினன்; பிதற்றினன்; ஏங்கினன்.

கேட்ட கண்ணகி 'உம்மைப் பிரிந்திருந்த காலத்தில் எனக்கு நல்ல உணவில்லை; உயர்ந்த ஆடை அணிகலன்கள் கிடைக்கவில்லை; உம்மை மணந்து கொண்டதால் துன்பமேயன்றி இன்பம் ஏது' என்றெல்லாம் மொழிந்தாள் என்று எண்ணுகின்றீர்களா? இல்லை யில்லை! "என் அருமைத் தலைவரே! இராவழி நடந்ததால் எனக்கொன்றும் அலுப்புத் தோன்றவில்லை. காரணம் நும்முடன் வந்தமையே! நும்மைப் பிரிந்து தனித்திருந்த காலமே — அதிலும் தனிமைத் துன்பத்தால் — இன்பமின்றிக் கழிந்தது. அப் போழ்து பெருந்

கவலையொன்று என்னை மிகவும் தாக்கியது. நம் வீட்டிற்கு வந்த அறவோர்கட்கு ஒன்றும் அளித்தேனில்லை; செந்தண்மை பூண்ட அந்தணர்களை மகிழ்வித்தே னில்லை; துறவிகளைக் காத்தே னில்லை; விருந்தினர்களை எதிர்கொண்டு வரவேற்றேனில்லை, பெண்கட்குக் கிடைக்கக்கூடிய இவ் அரும் பெரும் வாய்ப்புக்களை யெல்லாம் இழந்ததே எனக்குத் துன்பமாகத் தோன்றியது" என்று அன்பு கனிய இன்மொழி புகன்றாள். ஆகா! என்னே நம் கண்ணகியின் கலங்காத கற்பு நோக்கம்! இதனை,

> "அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என இளங்கோவடிகள் இனிமையாகச் சிலப்பதிகாரம் என்னும் நூலில் பொறித்துக் காட்டியுள்ளார்.

## சீதையின் சீரிய நோக்கம்

இராமனும் சீதையும் நாட்டை விட்டனர். காட்டை யடைந்தனர். அங்கே சீதை இராவணனால் சிறையெடுக்கப்பட்டாள். இலங்கையை யடைந்தாள். இராமன் காட்டில் தனித்து வருந்தினன். இலங்கையில் இருக்கும் சீதையின் கவலைக்கோ ஓர் எல்லையில்லை. அவள் கவலை சென்றது எவ்விதத்தில்? "காட்டில் நாம் இருந்த குடிசைக்குப் பல துறவிகள் விருந்தாக வருவார்களே, அவர்களின் நிலை என்ன? அவர்கட்குச் சமைத்துப் பரிமாறுபவர் யாவர்? அங்கிருந்து அவர்க்குத் தொண்டு செய்வதற்கும் முடியாமற் போனதே. அவ் விருந்தினரைக் கண்டதும் உணவு முதலியவற்றால் "மகிழ்வித்தற்கின்றி நம்

கணவர் மனம் என்ன பாடு படுகின்றதோ அங்கு" என்றெல்லாம் பல எண்ணிக் கவன்ருள். இதனை,

" அருந்து மெல்லடகு யாரிடம் அருந்துமோ என்றழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறு மோஎன விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென
மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித் திடவும்ஆண் டெழாதாள்"

என்னும் கம்பரின் உருக்கமான பாடலால் அறியலாம். தென்னுட்டுப் பண்பாட்டில் ஊறி வளர்ந்து வாழ்ந்த கம்பர், சீதையின் வாயிலாக விருந்தோம்பியதை வற்புறுத்தியதில் வியப்பொன்றும் இல்லையன்ரே?

## பெண்டிர் திறமை

கண்ணகியும், சீதையும் விருந்தோம்பாது போயினும் தம்மால் முடியாது போனமைக்கு வருந்தியாவது இருப்பது மிகவும் போற்றிப் புகழ்தற்குரியதாகும். சிறந்த பெண்களின் இலக்கணம் இதுவே. தாங்கள் எவ்வளவு எளிய நிலையில் இருப்பினும், தம்மை நாடி வந்தவர்களை உதறித் தள்ளாமல் மகிழ்விக்கும் மனப்பான்மையும், திறமையும் பெண்டிர்க்கு இருத்தல் இன்றியமையாததாகும்.

வீட்டில் ஒன்றும் இல்லை. உணவு தண்ணீரே! அதுவும் ஒருநாளைக்கு ஒரு குடத்திற்குமேல் மறு குடத்திற்கு வழியில்லை. (1950-ஆம் ஆண்டு இந் நிலையில்தானே உளது.) இந் நெருக்கடியான நேரத்தில் சுற்றத்தினர் வந்து சூழ்ந்துவிட்டனர். சுற்றத்தார் என்ருல் ஒருவரல்லர்; இருவரல்லர்; கடல் நீரும் போதாத அளவில் பலர் கூடிவிட்ட

னர். அஃதன்று; பெண் தன் முழுத் திறமையையும் பயன்படுத்தவேண்டும். இதுபற்றியன்றோ,

"குடநீர் அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடல்நீர் அறஉண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்"

என நாலடியாரும் முழங்குகின்றது.

## நாட்டிற்கே பெருமை

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், இளங் கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ என்னும் இரண்டு மன்னர்கள் ஓரிடத்தில் வீற்றிருந்தனர். பெருந் தலைச் சாத்தனார் என்னும் புலவர் அங்குச் சென்றார். அவர், இளங்கண்டீரக் கோவை மட்டுமே வணங்கிப் பாராட்டினார். உடனிருந்த இளவிச்சிக்கோ, ஏன் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை? என்று புலவரைக் கேட்டான். அவனுக்கு அவர் கூறிய பதில் வருமாறு:—

"இளவிச்சிக்கோவே! பண்டைக் காலந் தொட்டே கண்டீரக் கோனுடைய நாட்டு மக்கள் மிகவும் நல்லவர்கள். பாடும் புலவர் வந்துவிட்டால் பாராட்டிப் பரிசுதந் தனுப்புவார்கள். ஆண்கள் மட்டும் அல்லர். பெண்களும் அத்தகையோரே! தம் கணவர் வெளியூருக்குச் சென்றிருக்கும்போது புலவர்கள் வந்துவிடின், கணவர் வரும்வரையும், வந்தவரைக் காக்கவைத்திருக்க மாட்டார்கள். பயனின்றியும் அனுப்ப மாட்டார்கள். உணவு முதலியவற்றால் உளங்குளிரச் செய்வார்கள். அது மட்டுமா? தம் தகுதிற் கேற்பப் பெண்யானைகளை அணிகலன்களால் அலங்கரித்து அவற்றைப் பரிசாக அளிப்பார்கள். அத்தகைய உயர்ந்த மனப்

பான்மை நிறைந்த உறவினர்களையும், குடிமக்களையும் உடையவர் கண்டீரக்கோ, ஆதலின் அவரைப் பாராட்டினேன். நீயோ, பெண்கொலை புரிந்த நன்னன் உறவினன். பாடும் புலவர் நின்னைக் காணவரின், நின்கோட்டை அடைத்த கதவோடு அவர்கட்குக் காட்சியளிக்கும். ஒருவரும் உள்ளே புகவே முடியாதென்றால் பலன் பெறுவது எப்படி? அதனாலேயே என்போன்றோர், உன்போன்றோரை எப்போதுமே பாராட்டுவதில்லை" என்று கூறி முடித்தார் புலவர். இவ்வரலாற்றை, அப் புலவர் பாடிய

"பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து
புன்தலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீரக் கோன் ஆகலின் நன்றும்
முயங்க லான்றிசின் யானே, பொலந்தேர்
நன்னன் மருகன் அன்றியும் நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே வயங்கு மொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின் ஆடுமழை
அணங்குசால் அடுக்கம் பொழியுநும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே"

என்னும் புறநானூற்றுப் (151) பாடல் புலனுக்கும். கணவர் இல்லாச் சமயத்தும் பெண்கள் விருந்தோம்பியதால் உண்டான பெருமை அவர் குடும்பத்திற்கு மட்டுமா? நாட்டு மன்னற்கும், நாட்டிற்கும் உரியதாயிற் றன்றோ? அதனாலன்றோ, இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னரும், நாம் அவர்களைப்பற்றி நினைக்க முடிகிறது; எழுதமுடிகிறது; படிக்க முடிகிறது. விருந்தோம்பலின் சிறப்புத் தான் என்னே!

## ஔவையார் ஏமாற்றம்

விருந்தோம்புதலின் பெருமை யறியாத பேதையர் சிலர், விருந்தினரைக் கண்டதும் ஓடிப் பதுங்குகின்றனர். சில வீடுகளில் கணவன் விருந்தினரை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைய முடியாது. தவறி நுழைந்தாலோ புடவை கட்டிய புலி பாயும் பாவையெனப் பெயர்பெற்ற பாம்பு சீறும். இந்நிலையில், விருந்தினரைக் கண்டால் தலைமறைவாய்ப் போகாமல் வேறென்ன செய்வான் கணவன். விருந்தினரை அழைத்து வந்தால், மனைவி கணவன் தலையில் சட்டியையிட்டு உடைக்க, அது வளையம்போல் கழுத்தை அலங்கரித்த கதையை, "வீணாய் உடைந்த சட்டி வேணதுண்டு என் தலையில், இந்தப் பூணாரம் பூண்ட புதுமைதனைக் கண்டதில்லை" என்னும் அடிகள் அறிவிக்கவில்லையா?

ஒரு சமயம், ஒரு வீட்டின் வெளித்திண்ணையில் விருந்தாக அமர்ந்திருந்தார் ஔவையார். அவரை எப்படியாவது உண்ணச்செய்ய வேண்டும் என்பது அவ்வீட்டு ஆடவனின் ஆவல். அவன் மனைவியோ கொடுமைக்கு இருப்பிடம். விருந்து வந்துள்ளதென அவளிடம் விளம்பவும் அச்சம். ஆதலின், அவளைத் தன்வயப் படுத்துவதற்காகச் சில தொண்டுகள் செய்ய முற்பட்டான். அவள் அருகில் சென்றான். தலையிலுள்ள ஈரையும் பேனையும் எடுத்தான். கூந்தலைக் கோதி முடித்தான். தண்ணீரால் முகத்தைத் துடைத்துத் தூய்மை செய்தான். பொட்டிட்டான். மற்றும் பணிவிடைகள் பல புரிந்தான். இனி நம் வேண்டுகோளை மனைவி ஏற்கலாமென அரை குறையாய் நம்பினான். கட்டிக்கொண்டான் கையை, மெதுவாக, விருந்து வந்துள்ளதென்று விண்ணப்பம் செய்தான்.

அவ்வளவுதான், அம்மைக்கு வந்தது சினம். எழுந்தாள்; ஆடினாள்; சரமாரியாகப் பாடினாள் சில பாடல்களை; அவன் ஓடினான்; விடவில்லை; தானும் ஓடினாள்; பழமுறத்தாலும் சாடினாள். பார்த்தார் ஔவையார். அந்த வேகம் தன் பக்கமும் திரும்பிவிடுமோ என்று அஞ்சினார். இவ்வளவு நேரம் உண்ணக் காத்திருந்து ஏமாந்து போன அவர் வாய், உண்பதற்குப் பதிலாக,

“ இருந்து முகந்திருத்தி ஈரொடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடிமுன் தான் ”

என்று பாடத்தொடங்கி விட்டது. இத்தகைய கொடிய நிலை குடும்பத்தில் கூடவே கூடாது. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளலாமா? இன்பத்திற்கன்றோ குடும்பம்? துன்பத்தைத் தூரத்தில் ஓட்டுவதே அறிவுடைமையாகும். ஆடவர்க்கு மனமில்லாது போயினும், பெண்டிர் விரும்பினால் விருந்தோம்ப முடியும். ஆதலின் அவர்கள் அக்கலையை மறவாமை கடமையாகும்.

## 3. குழந்தை வளர்ப்பு

“ மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு ”

என்றார் வள்ளுவர். உலகில் குழந்தைகள் பிறப்பது நின்றுவிடின் எதிர்கால உலகமே இல்லையென்றால், குடும்பத்தில் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்று சொல்லவா வேண்டும்? குழந்தையில்லாத வாழ்வும் ஒரு வாழ்வாகுமா? பல பொருள்களையும் படைத்துப் பலரோடுண்டு மகிழக்கூடிய அளவு பெருஞ் செல்வராய் மட்டும் இருந்தால் போதுமா? அல்லது, உலகமெல்லாம் ஒரு குடைக்

கீழ் அமையப்பெற்று, முடிசூடிய மன்னராய் விளங்கினால்தான் போதுமா? தம்பிள்ளைகள் பேசுகின்ற, யாழ்—புல்லாங்குழலினும் இனிமையான மழலைச் சொற்களைக் கேட்டு மகிழவேண்டாமா? குறுகுறுவென நடக்கும் நடையைக்கண்டு பெருமிதம் பெற வேண்டாமா? தம்மேல் படுத்துப் புரண்டு, கையை நீட்டிக் காலால் உதைக்கும் உதையை ஏற்று இன்புற வேண்டாமா? உண்ணும் உணவில் கையையிட்டுத் துழாவி வாயில் வைத்துக்கொண்டு, தம்மேலும் பூசி நகைக்கின்ற குழந்தையின் செயலைக்கண்டு களிகூர வேண்டாமா? இதுவன்றோ சுவையுடைய வாழ்க்கையாகும். இக்கருத்து, பாண்டியன் அறிவுடைநம்பி என்னும் அரசனால் பாடப்பட்ட

"படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்தும் சிறுகை நீட்டியும்
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே"

என்னும் புறநானூற்றுப் (188) பொற் பாடலால் புலனாகும்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று நம் வள்ளுவரும் நயம்பட நவின்றுள்ளாரன்றோ?

## தாய் எப்படி—மகள் அப்படி

கொஞ்சுவதற்குக் குழந்தை பெற்றுவிட்டால் மட்டும் போதுமா? நன்முறையில் வளர்க்கவும் தெரியவேண்டும். 'தாய் எப்படி—மகள் அப்படி', 'தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால் மகளை வீட்டில் பார்க்கவேண்டியதில்லை' என்னும் பழமொழிகள் அறிவிப்பதென்ன? பெற்றோர்களின் குணமே பிள்ளைகட்கு இருக்கும் என்பது இவற்றால் விளங்கவில்லையா? பிள்ளைகள் ஒழுங்காய் இருக்கவேண்டுமானால், பெற்றோர்களும் அவ்விதம் நடந்துகாட்ட வேண்டும். அதிலும், உடனிருந்து வளர்க்கும் உரிமைபெற்ற தாய் ஒழுங்கானவளாக ஒழுகவேண்டும்.

சில பிள்ளைகள், தாய்மார்களின் தீக்குணங்களைக் கண்டு தாமும் பழகிக்கொள்கின்றனர். கண்டவுடன் தாமாகவே பழகிக்கொள்ளும் பிள்ளைகட்கு, தீக்குணங்களைக் கற்றுக்கொடுக்கும் தாய்மார்களும் உண்டு. பிறரைத் திட்டவும், பிறர் பொருளை எடுத்துக்கொண்டு வரவும் கற்றுக்கொடுப்பார்கள். இப்பழக்கம் எள்ளத்தனையும் கூடாது. தாம் ஓர் ஆசிரியர் (குரு)போல் இருந்து நல்ல கருத்துக்களைப் புகட்டவேண்டும். நல்ல பழக்க வழக்கங்களில் திருப்பவேண்டும். பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படக்கூடிய வேலைகளைத் திறம்படக் கற்றுக்கொடுக்க வேண்டும். பிள்ளைகட்கெதிரில் கெட்டதைப் பேசுவதோ, செய்வதோ பெருந்தவறு. கெட்டதைப் பேசினாலும், செய்தாலும் அம்மா வருந்துவார்கள் என்ற அச்சம் பிள்ளைகட்கு உண்டாகும்படித் தாய்மார்கள் நடந்துகொள்ளவேண்டும்.

## வீரம் ஊட்டல்

சில தாய்மார்கள் — சிலரென்ன — பலரும், பிள்ளைகளை அடக்குவதற்குத் தம் மிரட்டலைப் பயன்படுத்துவதில்லை. பூனை, பூச்சாண்டிகளைக் காட்டியே அச்சுறுத்துகின்றனர். உமாதேவி திருஞான சம்பந்தருக்குப் பால் ஊட்டியபோது சர்க்கரைக்குப் பதில் ஞானத்தைக் குழைத்து ஊட்டியதாகப் புராணங்கள் புகலக் கேட்டுள்ளோம். அது மிக நன்றாயிற்றே. ஆனால், நம் தாய்மார்களோ, குழந்தைகட்குப் பால் ஊட்டும் போது, கூட அச்சத்தையும் குழைத்து ஊட்டி விடுகின்றனர். என்னே பேதைமை! சிறு வயதில் ஏற்பட்ட இவ்வச்சம், பெரியவர்களான பின்னும் வாழ்க்கையைப் பெரிதும் தாக்குகின்றது. தொட்டில் பழக்கம் கடைசி வரையுமன்றோ? ஆதலின் குழந்தைகளைக் கோழைகளாக்கக் கூடாது. வீரம் ஊட்டி வளர்க்க வேண்டும். வீரமும் தீய வழிகளில் செலுத்துவதாய் இருத்தலாகாது. பிள்ளைகட்கு வீரம் வரவேண்டுமாயின், முதலில் தாய்மார்கட்கும் வீரம் வேண்டும். பண்டைக் காலத்திலிருந்த கிழவி யொருத்தி, சிறுவனென்றும் பாராது, தன் ஒரே மகனை யழைத்து அலங்கரித்து, 'போருக்குப் போய் வெற்றி பெற்று வா குழந்தாய்' என்று கூறி அனுப்பியதாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று அறிவிக்கின்றது. இக்காலத்துப் பெண்டிரோ, மகன் பட்டாளத்திற்குப் புறப்பட்டானாயின் கூக்குரல் கிளப்புகின்றனர். இது கோழையின் அறிகுறி. தள்ள முடியாத கட்டாயம் ஏற்படின், தாமும், அயல் நாட்டுப் பெண்களைப் போல் போர்க்களத்தின் முன்னணியில் நிற்கவேண்டும். இத்தகைய தாய்மார்களின் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளே

வீரமணிகளாகத் திகழ்வார்கள். புலிக்குப் பிறந்ததும் பூனையாகுமா ?

## கடமைகள்

ஒவ்வொருவரும் தம் கடமையுணர்ந்து ஒழுக வேண்டியது கட்டாயம் அல்லவா ? பொன்மொழியார் என்னும் புலவர்—புலவரென்றால் ஆடவர் அல்லர்—பெண் புலவர்—புறநானூற்றுப் பாடல் ஒன்றில் ஒவ்வொருவருடைய கடமைகளையும் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகளைப் பெற்று வளர்த்தல் பெண்ணாகிய என் கடமை; அப்பிள்ளையைக் கல்வியறிவிற் சிறந்தவனாக்குதல் தந்தைக்குக் கடமை; அவன் போர் செய்தற்கு வேல் முதலிய படைகளை வடித்துத் தருதல் கொல்லன் கடமையாகும். அவனுக்கு நல்ல சிறப்புச் செய்தல் அரசன் கடமையாம். போர்க்களத்தில் முன்னணியில் நின்று, எதிரிகளின் யானைகளைத் தன் உடைவாளால் வெட்டி வீழ்த்தி வெற்றி பெறுதல் காளையாகிய என் மகனுக்குக் கடமையாகும்.'' என்னும் கருத்தில்,

'' ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே ''

என அழகாகப் பாடியுள்ளார் அவ்வீரப் பெண் புலவர். கணவன் போர்க்குச் செல்லத் தயங்கிய போது, 'என் பெண் உடையை நீ கட்டிக்கொள்! உன் ஆண் உடையை எனக்குக் கொடு! நான் போர்க்குச் சென்று வெற்றி பெற்று மீள்வேன்'

என்று முழங்கிய வீரப் பெண்மணிகள் பிறந்த நாடே நாம் பிறந்து வாழும் பொன்னாடு. பிள்ளைகட்கு வீரம் ஊட்ட வேண்டுமானால், பெண்கட்கும் வீரம் இருக்க வேண்டும் என்னும் கருத்தை வற்புறுத்துவதற்காக இவ்வளவு எழுதினேனே தவிர பெண்கள் காளிகளாகிக் காட்சியளிக்க வேண்டும் என்று கதை கட்டியதாக யாரும் கசப்படைய மாட்டார்கள் என்றே நம்புகின்றேன்.

## கண்டிப்பு

சில தாய்மார்கள், பிள்ளை எவ்வளவு குறும்பு செய்தாலும் விட்டுக் கொடுக்கின்றனர். எதைக் கேட்டாலும் தருகின்றனர். எனவே, சில பிள்ளைகள் கெடுவதற்கும், மறைவதற்கும் தாய்மாரே காரணம் என்பதில் தடையொன்றுமில்லை. செல்லம் தரவேண்டிய நேரத்தில் செல்லம் தரவேண்டும். கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்க வேண்டும். அறியாமையோடு கூடிய அன்பினால் கேட்ட பண்டங்களையெல்லாம் தின்பதற்குத் தராமல், அளவாகநடந்து, அடக்கி ஒடுக்கிவளர்க்க வேண்டும். அடித்து வளர்க்காத பிள்ளையும், ஒடித்து வளர்க்காத முருங்கையும் எதற்குப் பயன் ?

## கல்வியும் கட்டாயமும்

அழகாக, அலங்காரமாகப் பிள்ளையை வளர்த்து விட்டால் போதுமா? காகிதப் பூவுந் தான் அழகாக, அலங்காரமாக இருக்கிறது. ஆனால் நறுமணம் இல்லையே! அந் நறுமணம் போன்ற கல்வியை அளிக்காமல் பிள்ளையை வளர்ப்பவர்கள், காகிதப்பூச் சூடுபவரையே யனையர். உலகப் பொருள்கள் பல. அவற்றுள்

பெரும்பாலன, பிறரால் பறிக்கப் படலாம்; அழிக்கப்படலாம். நாமாகவே பிறர்க்கும் கொடுத்தாலும் குறைந்து விடலாம். கல்விப் பொருள் அத்தகையதோ? யாராலும் அழிக்கப்படாது. கொடுக்கக் கொடுக்க வளர்ந்து, புகழை நிலைநிறுத்தும். எனவே, இத்தகைய கல்வியையன்றே பெற்றோர்கள் தம்பிள்ளைக்குத் தேடிவைத்துச் செல்லவேண்டும். இக்கருத்தை,

> "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
> மிக்க அரசர் செறின்வவ்வார் இப்புவியில்
> எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
> விச்சை மற் றல்ல பிற"

என்று நாலடியாரும் நவில்கின்றது. இதனில் பெற்றோர்க்கு மிகவும் கருத்திருக்க வேண்டும். கல்வியே கட்டாயம் என்பதைக் கட்டாயம் உணர வேண்டும். அஃதறிந்து பிள்ளைகளும் கல்விச் செல்வத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ் விருபதாம் நூற்றுண்டில், கல்வியில்லாத பிள்ளையோ, அத்தகைய மூடப் பிள்ளையைப் பெற்று வளர்த்த பெற்றோரோ உலகத்திற்குச் சுமையே என்று சொன்னல், சொல்பவர் மேல் வருந்திப் பயனில்லை.

## ஒத்துழைப்பு

இது காறும், குடும்பப் பொறுப்புக்கள் அனைத்தையும் பெரும்பாலும் பெண்கட்கே உரித்தாக்கி வந்தோம். ஆயினும். ஆண்கட்கு அவற்றுள் பங்கு இல்லையென்று தள்ளமுடியாது. ஆண்களுக்குப் பெண்கள் எவ்வளவு நன்மைகள் செய்கின்றார்களோ, அவ்வளவு நன்மைகளை ஆண்களும் பெண்கட்குச் செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள். எனவே, ஆண்கட்கு உழைக்கவே பிறந்த

வர்கள் பெண்கள்; ஆண்கள் அவர்களை வருத்தித் தம் விருப்பம் போல் வேலை வாங்கிக்கொள்ளலாம் என்றெண்ணுவதோ, பேசுவதோ பெருந்தவறு. வேண்டாம் என்ற பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம், என்றபடி இல்லாமல், ஆடவரும், பெண்டிரின் தொண்டிற்கு ஒத்துழைத்து, அவர்களை நன் முறையில் நடாத்த வேண்டும். அப்போதே பெண்மக்களின் வாழ்க்கையும் பொலிவு பெறும்.

## வாழ்பவர் யார்?

வாழ்க்கை ஓவியர்களாகிய கணவனும், மனைவியும், ஒருவரையொருவர் காத்தும், விருந்தோம்பியும், நன்மக்களைப் பெற்று நன் முறையில் வளர்த்தும், உழைத்து ஊதியம் திரட்டி நல்வழியில் செலவிட்டும் புகழுடன் வாழவேண்டும். புகழ் இல்லாவிடினும், இகழ் உண்டாகாமலாவது தம்மைக் காக்க வேண்டும். மிகப்பெருஞ் செல்வராய் மாட மாளிகையில் வாழ்வதுதான் புகழ் வாழ்க்கையென்றும், வறுமையால் வாடும் ஏழைகளின் வாழ்க்கை இகழ் வாழ்க்கையென்றும் சொல்லவே முடியாது. செல்வராயினும், கணவனும் மனைவியும் ஒற்றுமையும், உள்ளன்பும் இன்றிச் சச்சரவு இட்டுக்கொள்ளும் வாழ்க்கையே வசை வாழ்க்கையாகும். ஏழையராயினும், இருவரும் ஒற்றுமையும், உள்ளன்பும் கொண்டு, நல்லோர் என்னும் பெயர் பூண்டு வாழும் வாழ்க்கையே இசை வாழ்க்கையாகும். செல்வப் பெண்ணாயினும் வசையுடன் வாழ்பவளே வாழாதவள். ஏழைப் பெண்ணா

யினும் இசையுடன் வாழ்பவளே வாழ்பவள். இதை நான் கண்டு பிடித்துச் சொல்லவில்லை.

" வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை ஒழிய
வாழ்வாரே வாழா தவர் "

என்பது திருவள்ளுவரின் பொய்யா மொழி. எனவே, காதலர் இருவரும் கருத்தொருமித்து, கடமையுணர்ந்து, நல்வாழ்வு வாழ்ந்து, வாழ்க்கை ஒவியர்களாகத் திகழ்வார்களாக!

## மங்கள விளக்கம்

" மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதில் புகழ்சால் உணர்வு "

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

ஸ்ரீ பிரின்டர்ஸ் 147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

பைந்தமிழ்ப் பதிப்பக

# வெளியீடுகள் :

(வித்துவான், சுந்தர - சண்முகனார் எழுதியவை)

---

1. வீடும் விளக்கும்
2. தனித்தமிழ்க் கிளர்ச்சி
3. காந்தியின் நாகரிகம்
4. திருக்குறள் தெளிவுரை முதற் படிவம்
5. திருக்குறள் தெளிவுரை இரண்டாம் படிவம்
6. திருக்குறள் தெளிவுரை மூன்றும் படிவம்
7. ஆத்திசூடி அமிழ்தம்
8. குழந்தைப் பாட்டு
9. சிறுவர் செய்யுட் சோலை
10. தமிழ்த் திருநாள்

11—19. திருக்குறள் தெளிவு—
தொடர்ச்சியான 9 வெளியீடுகள்

20. வாழ்க்கை ஓவியம்

★

கிடைக்குமிடம் :

சிங்கார-குமரேசனார்

**பைந்தமிழ்ப் பதிப்பகம்,**

61-B, வைசியர் தெரு : : புதுச்சேரி.